**தலைப்பு 002 – பிரதம அமைச்சர் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு - 002 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் மற்றும் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 22 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 02 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட கட்டுநிதி பெறுமதி ரூபா 1,042,000,000 ஆக இருந்ததுடன் திறைசேரியிடமிருந்து கோரப்பட்ட கட்டுநிதி பெறுமதி ரூபா 1,062,338,000 ஆக இருந்ததால் திட்டமிடப்பட்ட மற்றும் கோரப்பட்ட கட்டுநிதிகளுக்கு இடையே ரூபா 20,338,000 வேறுபாடொன்று இருந்தமை அவதானிக்கப்பட்டது. | உரிய மாதத்தில் கொடுப்பனவிற்காக வழங்கப்படும் உறுதிச்சீட்டுக்களின் அளவு குறைவடைந்ததன் அடிப்படையில், கோரப்பட்ட கட்டுநிதியானது திட்டமிடப்பட்ட கட்டுநிதியை விட குறைவாக இருந்தது. | கட்டுநிதி திட்டமிடலை முடிந்தவரை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒதுக்கீடுகளை மாற்றுதல் | | |
| (i) | வருடாந்த மதிப்பீட்டின் நிதியேற்பாட்டிற்கு மேலதிகமாக செலவின விடயத்திற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு 12 செலவின விடயங்களின் நிதியேற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகள் 3 முதல் 200 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. | வருடாந்த பாதீடு உண்மையான ஊழியர்களுக்காக தயாரிக்கப்பட்டதுடன் சேவையின் தேவையின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புதல், கௌரவ பிரதமருக்கு புதிய பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டமை மற்றும் நோக்கெல்லை விரிவாக்கப்பட்டமை, விரிவாக்கம், எரிபொருள் விலை உயர்வு, மின்பிறப்பாக்கிகள் மற்றும் ஏனைய இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்களை பழுதுபார்த்தல் மற்றும் அவற்றின் உபகரணங்களின் அதிகரிப்பு, பாதுகாப்பு பிரிவு கட்டிடத்தின் வாடகைக்கு போதுமான நிதியேற்பாடு வழங்கப்படாமை, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விரிவுரை மண்டபம் மற்றும் அமைச்சரவைக்கான வளிப்பதனாக்கிகளின் கொள்வனவு, வெளிநாட்டுப் பயணங்களின் அதிகரிப்பு கணக்கில் போதிய நிதியேற்பாடு ஒதுக்கப்படாமை, 2022 இல் பிரதம அமைச்சரின் பதவியணியினர் | முடிந்தவரை சரியான மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தங்கியிருந்த கட்டிடத்தின் நிலுவை வாடகைக் கட்டணங்களின் தீர்ப்பனவு, ஏனைய செலவினங்கள், பொது நிர்வாக மற்றும் கூட்டிணைந்த சேவைகள் செயற்திட்டத்திற்கான நிதியேற்பாடுகள் போதாமை மற்றும் தகவல் தொழில்நுட்ப அனர்த்த நிவாரண தளம் மற்றும் ஏனைய இயந்திரங்கள் போன்றவற்றை நிறுவுவதற்கு கணனி வன்பொருள் கொள்வனவிற்கு நிதியேற்பாடுகள் போதாமை போன்ற காரணங்களால் நி.பி. 66 இன் பிரகாரம் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன், | |
| (ii) | பாதீட்டின் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் 3 சதவீதம் முதல் 586 சதவீதம் வரையிலான நிதியேற்பாடுகளின் தொகை நி.பி. 66 மூலம் 20 ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | பிரதம அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியினரை பணிக்கமர்த்துவதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதன் விளைவாக, உள்ளூர் பயணச் செலவினங்களுக்கு நிதியேற்பாடு காணப்படவில்லை, கௌரவ பிரதமர் உள்ளூர் பணத்துடன் வெளிநாடு செல்லவில்லை, எழுதுபொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகளைக் கட்டுப்படுத்துதல், சீருடை அணிந்த அதிகாரிகள் இல்லாதமை, கடிதத் தொடர்புக்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், நிர்வாக முறைகளைப் பயன்படுத்துதல். மின்சாரம் மற்றும் நீர் செலவினத்தை குறைத்தல், கொள்வனவை மட்டுப்படுத்துதல், இடம் மாறினாலும் வேறு அதிகாரிகளை நியமிக்காமல் இருத்தல் மற்றும் கணிசமான எண்ணிக்கையிலான அதிகாரிகள் சம்பளம் இன்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறையை எடுத்தல், போக்குவரத்து படி பெறும் அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்தல், ஆதன கடன்களை மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான அதிகாரிகள் பெற்றிருந்தது, தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தமை குறைவடைந்தது மற்றும் கட்டுப்பாடுகள், பயிற்சி நிகழ்ச்சிகள் குழுக்களாக நடாத்தப்பட்டது மற்றும் பல வளவாளர்கள் தங்கள் சேவைகளை இலவசமாக வழங்கினர், ஒதுக்கீடுகளில் சேமிப்பு இருந்தது. அதற்கிணங்க அவை ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டன. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்காத 02 பாதீட்டு செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீடுகள் மற்றும் நி.பி. 66 மூலம் ஒதுக்கீடுகள் பெறப்பட்டு செலவிடப்பட்டிருந்தன. | 2/22 ஆம் இலக்க பொது கணக்குகள் வழிகாட்டல்களின் 2.1.4 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டின் திட்டமிடப்படாத மாற்றத்தின் படி முன்னைய ஆண்டில் சீன அரசாங்கத்திடமிருந்து நன்கொடைகளாக விநியோகத்திற்காக பெறப்பட்ட பாடசாலை உபகரணங்களின் இருப்பின் நிதி பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு ரூபா 75 மில்லியன் மேலதிக நிதியேற்பாடு மற்றும் நி.பி. 66 இன் பிரகாரம் ரூபா 34 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் பாதீட்டு தலைப்பு 002-1-2-6-2202/13 இன் கீழ் அதனை கணக்கீடு செய்தது. மேலும் தொடர்புடைய பாடசாலை உபகரண இருப்புக்களை விடுவிப்பதற்கு சுங்க இறக்குமதி வரிகள் மற்றும் ஏனைய வரிகளை செலுத்துவதற்கு மேலதிக நிதியேற்பாடுகளை மேற்கொள்வதில் ரூபா 24.5 மில்லியன் ஏற்பட்டிருந்தது. | தேவையை கண்டறிந்து மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு உள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | | | |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| (i) | நி.பி. 104(3) | 2023 ஆம் ஆண்டில் வாகன விபத்துக்கள் தொடர்பான நட்டங்கள் தொடர்பான பூர்வாங்க அறிக்கை மற்றும் இறுதி அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | விசாரணைகள் பூர்த்தியடைந்தவுடன் நி.பி. 104(3) தொடர்பான பூர்வாங்க அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையை கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வேன். | விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 115(1) | ஒரு நிதியாண்டிற்குள் சமர்ப்பிக்கப்படும் உரிமைகோரல்கள் முடிந்தவரை அந் நிதியாண்டிலேயே தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும், மேலும் இது சாத்தியமில்லாத சந்தர்ப்பங்களை முடிந்தவரை குறைப்பதற்கு போதுமான | நிதியாண்டில் விலைப்பட்டியல்கள் கிடைக்காதது, 2022 இல் பிரதம அமைச்சரின் அலுவலகத்தில் புதிதாகச் சேர்ப்பதற்காக 2022 இன் இறுதியில் கட்டுநிதி இல்லாமை. தங்கள் அவதானிப்புக்களின் | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விவேகத்துடனும் தொலைநோக்குடனும் பணியாற்ற வேண்டும், ஆனால் மாதிரி சோதனையின் போது, 04 சந்தர்ப்பங்களில் அதற்கிணங்க ரூபா 1,842,254 கொடுப்பனவு இருக்கவில்லை. | பிரகாரம் முடிந்தவரை அந்த நிதியாண்டிற்குள் செலுத்தி தீர்ப்பனவு செய்வதற்கு குறித்துக் கொண்டுள்ளேனன். | |
| (iii) | நி.பி. 315 | 04 நிர்வாக உத்தியோகத்தர்களும் 38 சாரதிகளும் பிணைமுறிகளை வழங்கியிருக்கவில்லை. | பொதுச் சேவை பரஸ்பர சேமலாப சங்கத்தில் அங்கத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு 2024.03.18 ஆம் திகதிய உள்ளக சுற்றறிக்கையின் மூலம் பிணையை வழங்க வேண்டியிருந்த உத்தியோகத்தர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (iv) | நி.பி. 880, 881 | நிர்வாக பொறுப்பில் உள்ள அல்லது அதிகார கையளிப்பின் கீழ் உள்ள மூன்று உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளுக்குத் தேவையான பிணைமுறிகளை வைத்திருக்கவில்லை. | ஒரு உத்தியோகத்தர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றிருந்ததுடன் ஏனைய உத்தியோகத்தர்கள் பொது சேவை பரஸ்பர சேமலாப சங்கத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். | -மேற்படி- |
| (v) | நி.பி. 892 | பிணைமுறிகள் வழங்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களின் திருத்தப்பட்ட அறிக்கை உரிய திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அறிக்கையானது தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு உரிய திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பது குறித்துக்கொள்ளப்பட்டது. | -மேற்படி- |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில் 21,878 பொதுமக்கள் கோரிக்கைகள் பெறப்பட்டிருந்த போதிலும் தேவையான கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பிரச்சனைகளின் எண்ணிக்கை 685 மாத்திரமே ஆகும். | மக்கள் தொடர்பு பிரிவுக்கு கிடைத்த கடிதங்களின் மொத்த எண்ணிக்கை 21,878 ஆகும். பிரதம அமைச்சர் அலுவலகத்தின் மக்கள் தொடர்பு பிரிவு அந்த கோரிக்கைகளை தொடர்ந்து பின்பற்றுகிறது. நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த பிரச்சனைகளுக்கு கடிதங்கள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மூலம் மொத்தம் 685 பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. | பொதுமக்கள் பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வு காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 ஒக்தோபர் 23 இல் நடைபெற்ற தேசிய கூட்டுறவு இயக்கம் தொடர்பான நிறுவனங்களின் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடலுக்காக உப குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், வழிமுறைகள் மற்றும் அது வழங்கிய பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையுடன் சேர்த்து அடுத்த 03 வருடங்களுக்குள் அமுல்ப்படுத்துவதற்கு பொருத்தமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 அளவில் அப் பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | விடயம் தொடர்பாக அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டதுடன் பின்னர் முன்வைக்கப்பட்ட தகவல்கள் அதன் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் உண்மைகளின் அடிப்படையில் இடைக்கால அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு தயாரிக்கப்பட்டு வருகின்றன. | கூட்ட கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய பொது நிறுவனங்களுக்குச் சொந்தமான 19 வாகனங்கள் முறையான உரிமைமாற்றம் இன்றி 1 முதல் 8 ஆண்டுகளுக்குள் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களை அலுவலகத்திற்கு உரிமைமாற்றுவது மீளாய்வாண்டு இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பொது நிர்வாக அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் தற்காலிக அடிப்படையில் 02 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து 05 வாகனங்கள் கடன் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளதால் 04 வாகனங்கள் கையகப்படுத்தப்பட்டு எஞ்சிய வாகனங்கள் முறையாக கையகப்படுத்தப்பட்டு பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் வாகனம் மாற்றப்பட்டுள்ளது. நிதி அமைச்சின் 03 வாகனங்களில் இரண்டு வாகனங்களை உரிமைமாற்றும் செயன்முறையில் நிதி அமைச்சு ஈடுபட்டுள்ளது. சொந்தமான கம்பனியின் கலைப்பு காரணமாக பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு உரிமைமாற்றுவதற்காக வாகனம் ஒன்று கொம்பரோலர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் உரிமைத்துவத்தை முறையாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதம அமைச்சர் அலுவலகத்திற்குச் சொந்தமான 07 வாகனங்கள் மீளளிக்கப்படும் திகதி குறிப்பிடப்படாமல் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு தற்காலிகமாக கையளிக்கப்பட்டிருந்தது. | பிரதம அமைச்சர் அலுவலகம் வழங்கிய வாகனங்கள் தற்காலிக அடிப்படையில் ஏனைய அலுவலகங்களுக்கு மீளளிப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட திகதிகள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. | சொத்துக்களின் உரிமைத்துவத்தை மாற்றுவதில் முறையான நடைமுறையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 யூலை 09 இல் நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் சேதமடைந்த கார் ஒன்று தவிர்ப்பு செய்யப்பட்டதுடன், பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம் 2022 நவம்பர் 23 இல் காப்புறுதியிலிருந்து முழுமையான இழப்பீடு கிடைக்காமல் ரூபா 200 மில்லியன் பெறப்பட்டிருந்தது. | சேதமடைந்த வாகனம் தவிர்ப்பு செய்யப்பட்டு காப்புறுதி இழப்பீடு ரூபா 263 மில்லியனாக இருந்த போதிலும் பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம், சேதமடைந்த அதியுயர் பாதுகாப்பு வாகனத்தை காப்புறுதி கம்பனியிடம் ஒப்படைக்க முடியாதிருந்ததால் காப்புறுதி கம்பனி ரூபா 200 மில்லியன் தொகையை மாத்திரமே செலுத்தியிருந்தது. இதே போன்று மற்றொரு உயர் பாதுகாப்பு கார் பிரதம அமைச்சர் அலுவலகத்தில் பயன்படுத்தப்படுவதாலும், உதிரிப்பாகங்களின் கிரயம் அதிகம் என்பதாலும், தேவையான உதிரிப்பாகங்களை களஞ்சியப்படுத்துவதற்காக டெம்பிள் ட்ரீ வளாகத்தில் கார் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் லொக் புத்தகத்தில் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த கார் 2024 மே மாதத்தில் நிதி அல்லாத சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்கு ஏற்படும் சேதத்தை குறைக்கும் வகையில், காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்கும், சொத்துக்களை முறையாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு சொந்தமான 07 வாகனங்கள் தொடர்பான சேத பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதில் 06 வாகனங்கள் பெரிய பழுதுபார்ப்பு பட்டியலில் இடம் பெற்றுள்ளன. | வாகன மதிப்பீட்டுக் குழு, வாகனங்களை பழுதுபார்த்து, இயங்கும் நிலைக்கு அவற்றை கொண்டு வந்த பின்னர் அவற்றை மதிப்பீடு செய்து, சம்பந்தப்பட்ட வாகனங்களுக்கு புதிய மதிப்பீட்டு பெறுமதிகளை வழங்கும். | வாகன விபத்து மதிப்பீடுகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் பயன்படுத்தப்பட்டு வந்த பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | இந்த மூன்று அரசாங்க பங்களாக்களும் 2022.07.22 முதல் பிரதம அமைச்சர் அலுவலகத்தால் பயன்படுத்தப்பட்டிருக்காத போதிலும், பாதுகாப்புப் படையின் | அரசாங்க சொத்துக்களை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| அமைச்சுக்கு சொந்தமான 03 அரசாங்க பங்களாக்கள் 2022 செப்தெம்பர் 22 முதல் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்காக பயன்படுத்தப்படாமல் உள்ளன. இது மீளாய்வாண்டின் இறுதி வரை சம்பந்தப்பட்ட அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | உறுப்பினர்கள் அதில் தங்கியிருப்பதால் அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. வாடகை, தண்ணீர் மற்றும் மின்சார விலைப்பட்டியல்களின் நிலுவைகள் இருப்பதால் காவலை மாற்றுவதில் பிரச்சனை இருந்ததுடன் 2024.03.27 இல் நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்தின் 2024.04.08 ஆம் திகதிய பீடி/என்எஸ்எல்ஈ/103/13/2022 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பாதுகாப்புப் படைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் காரணமாக நிலுவையாக உள்ள விலைப்பட்டியல்களை செலுத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார். நிலுவை விலைப்பட்டியல்கள் செலுத்தப்பட்ட பின்னர் அமைச்சு இரு வீடுகளின் காவலை மாற்றும். | எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டின் பிரகாரம் ஆறு வாகன விபத்துக்களுக்கான நட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | இதுவரை மூன்று வாகனங்களுக்கு நட்டங்கள் அறவிடப்பட்டுள்ளன. வாகனம் ஒன்றின் உதிரிப்பாகங்கள் பற்றாக்குறையால் பழுதுபார்ப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மற்றொரு வாகனம் பழுதுபார்ப்பதற்காக காப்புறுதி கம்பனியிடம் இருந்து இன்னும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. தாமதத்திற்கான காரணங்கள் 2024.04.09 இல் விசாரிக்கப்பட்டிருந்தது. | நட்டத்தை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுச் | சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைவ் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் "பிரதம அமைச்சர் அலுவலகம் இறுதிக்கட்டத்தில் எஞ்சியுள்ள | தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்களைக் |

| | | | |
|---|---|---|---|
| | செலவினங்களை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே பயன்படுத்த வேண்டும் எனவும் கட்டிடங்களை நிர்மாணித்து வாடகைக்கு விடுவதை நிறுத்துவது கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பராமரிப்பு மற்றும் புனரமைப்புக்காக முறையே ரூபா 181,520,617 மற்றும் ரூபா 38,883,447 செலவிடப்பட்டிருந்தது. | பழுதுபார்ப்புகளை பூர்த்திசெய்து, இல்லத்தை பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு மாற்றும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்கட்டிடத்தின் பணியை நிறைவு செய்து பயன்பாட்டிற்கு ஏற்றவாறு ஒப்படைக்கும் பொறுப்பும் இருந்தத போதிலும், 2023 ஆம் ஆண்டுக்கான நிதியேற்பாடுகள் இல்லாததாலும், மேலதிக நிதியேற்பாட்டை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அதற்கான செலவினகள் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு வழங்கப்படும் ஒதுக்கீடுகளுக்குள் முகாமை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதற்கான ஒதுக்கீடுகள் தேவைப்பட்டால், எதிர்காலத்தில் கருத்தில் கொள்ளப்படும். தேசிய பாதீட்டு திணைக்களம் 2023.04.05 இல் கோரப்பட்ட தொகைக்கு ரூபா 25 மில்லியன் மேலதிக நிதியேற்பாடுகளை வழங்கியுள்ளது. அதன் பிரகாரம் குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம், அனைத்து நிலுவையாகவுள்ள விலைப்பட்டியல்களையும் செலுத்தி பராமரிப்பிற்காக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூாராட்சி அமைச்சிடம் கட்டிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை விஜேராம உத்தியோகபூர்வ குடியிருப்பின் புனரமைப்புக்கான மொத்தச் செலவினம் ரூபா 472,529,073 ஆகும், இதில் ரூபா 456,032,672 லங்கா பில்டிங் மெட்டீரியல்ஸ் கோப்பரேஷன் லிமிட்டட்டிடம் இருந்து கட்டிட பொருட்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்டிருந்தது. லங்கா | எமது ஆவணங்களின் பிரகாரம் முன்னாள் பிரதமர் ஐந்தாவது நிறைவேற்று சனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை புனரமைப்பதற்காக பில்டிங் மெட்டீரியல்ஸ் கோப்பரேஷனிற்கு செலுத்த வேண்டிய பணம் எதுவும் காணப்படவில்லை. | சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி கணக்குகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பில்டிங் மெட்டீரியல்ஸ் கோப்பரேஷன் லிமிட்டட்டின் ஆவணங்களின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட விலைப்பட்டியல்களின் மொத்த பெறுமதி ரூபா 639,218,155 ஆக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம், ரூபா 183,185,483 பொருத்தமின்மையொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 556 ஆக இருந்தது. அதில் 264 பதவிகள் வெற்றிடமாக உள்ளன. அதில் 25 வெற்றிடங்கள் சிரேஷ்ட நிலைப் பதவிகளாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பிரதமருக்கு அரசியலமைப்பு ரீதியாக குறித்துரைத்த வகிபங்கு எதுவும் ஒதுக்கப்படவில்லை. மேலும் காலத்தின் தேவைக்கேற்ப, பிரதமரின் உடன்படிக்கையின் அடிப்படையில் பிரதமருக்கு ஒதுக்கப்பட்ட வகிபங்கை நிறைவேற்றுவதற்கு தகுதியான பதவியணியினரின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதமரின் செயலாளர் ஏற்பாடு செய்வார். பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தற்போதைய சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் திருத்தப்பட வேண்டியுள்ளதால் மீண்டும் தேவை ஏற்படும் போது உடனடியாக பதவிகளை உருவாக்குவதில் உள்ள சிரமத்தைக் கருத்தில் கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட பதவி நிலைகளின் எண்ணிக்கையை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினராக பேணுவது பொருத்தமானதாகும். | வெற்றிடங்கள் நிரப்பப்படாவிட்டாலோ அல்லது பணிகள் பாதிக்கப்பட்டாலோ பதவியணியினர் திருத்தத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |